

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தின் திமுக மாவட்டச் செயலாளரும், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான சி.சண்முகம் உடலுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அஞ்சலி செலுத்தினார். உடன்ப பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், சைதை சம்பத், ராஜவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலத்தில், நேற்று (28.08.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றை செயல்படுத்துதல் தொடர்பாக, அனைத்து தலைமைப் பொறியாளர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன், திருமதி. கு. இந்திராணி, இயக்குநர்/பகிர்மானம் (மு.கூ.பொ) மற்றும் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### ‘சட்டமன்ற நாயகர் கலைஞர்’ குழு சார்பில் – இன்று

# மயிலை ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் கருத்தரங்கம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் – பி.கே.சேகர்பாபு – பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பங்கேற்பு!

சென்னை, ஆக.29-

‘சட்டமன்ற நாயகர் கலைஞர்’ குழுவின் சார்பில் இன்று (29.8.2024) காலை 10.00 மணியளவில் கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கம் மயிலை ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் துவங்குகிறது.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் கடந்த ஜூன் 2023 முதல் தமிழ்நாடு அரசால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு துறைகளால் கருத்தரங்கங்கள், புகைப்படக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் பயனளிக்கின்றவிதம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு என்று முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் பேரவைத் தலைவர் தலைமையிலும் மற்றும் மூத்த அமைச்சர்கள் தலைமையிலும் அமைக்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

இக்குழுக்களில் ‘சட்டமன்ற நாயகர்கலைஞர்’ என்ற விழாக் குழுவானது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைவராகவும், இணைத் தலைவர்களாக பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஆகியோரையும், உறுப்பினர்களாக முன்னாள் பேரவைத் தலைவர் ஆர்.ஆவுடையப்பன், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி. ஞானசேகரன், முன்னாள் பேரவைச் செயலாளர்கள் ப.டில்லிதுரை மற்றும் மா.செல்வராஜ், தினத்தந்தி நிர்வாக ஆசிரியர் DER. சுகுமார் மற்றும் பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் ஆகியோரைக் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு கடந்த ஒரு வருடத்தில் 57 கல்லூரிகளிலும், 63 பள்ளிகளிலும் ‘நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத் தின்மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது’ என்ற தலைப்பில் கருத்தரங்கங்களை சிறப்பாக நடத்தியது. இதன்மூலம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தின்மூலம் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய மகத்தான தொண்டையும், தமிழ்நாடும் முன்னேற்றம் பெறவும், தமிழினம் எழுச்சி பெறவும் அவர் ஆற்றிய அரும் பணிகள் குறித்தும், தமிழ்நாடு மக்களும், மாணவச் செல்வங்களும் தெரிந்துகொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்திருந்தன.

கடந்த 27-2-2024 சென்னை, மாநிலக் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுக்கான மாநிலக் கருத்தரங்கம் பேரவைத் தலைவர் தலைமையில் சிறப்பாக நடத்தப்பெற்றது. இதில் 57 கல்லூரிகளிலிருந்தும் முதல் இடத்தைப் பெற்ற மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்தினர். அதன் தொடர்ச்சியாக இன்று (29-8-2024) பள்ளி மாணவர்களுக்கான மாநிலக் கருத்தரங்கம் சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையிலுள்ள, Rosary Matriculation Higher Secondary Schoolலில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் 61 மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு, தங்களது பேச்சாற்றலை வெளிப்படுத்த இருக்கிறார்கள்.

கலைஞர் அவர்களது சேவைகளை நினைவு கூரும் வகையில் நடைபெறவிருக்கும் மாநிலக் கருத்தரங்கத்தில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்கள், முன்னாள் பேரவைச் செயலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் திரளாகக் கலந்துகொள்கிறார்கள்.

### சென்னை பள்ளிகளில்

# பிரெஞ்சு மொழி கற்பித்தலை அறிமுகப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## மேயர் ஆர்.பிரியா முன்னிலையில் கையெழுத்து!

சென்னை, ஆக.29-

சென்னை பள்ளிகளில் பிரெஞ்சு மொழி கற்பித்தலை அறிமுகப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேயர் திருமதி ஆர்.பிரியா, பிரான்ஸ் தூதரகத்தின் துணைத் தூதர் திருமதி லிஸ் தால்போட் பாரே (Ms. Lise Talbot Barré - Consul General) ஆகியோர் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அலையன்ஸ் ஃபிரான்சைஸ் ஆஃப் மெட்ராஸ் (Alliance Française of Madras) சார்பில் சென்னை பள்ளியில் பிரெஞ்சு மொழி கற்பித்தலை அறிமுகப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேயர் திருமதி ஆர்.பிரியா, பிரான்ஸ் தூதரகத்தின் துணைத் தூதர் திருமதி லிஸ் தால்போட் பாரே (Ms. Lise Talbot Barré - Consul General) ஆகியோர் முன்னிலையில் நேற்று (28.08.2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் கையெழுத்தானது.

இந்தத் திட்டமானது முதற்கட்டமாக மார்க்கெட் தெரு-சென்னை மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவான்மியூர்-சென்னை மேல்நிலைப்பள்ளி மற்றும் பட்டேல் நகர்-சென்னை மேல்நிலைப்பள்ளி ஆகிய 4 பள்ளிகளில் தலா 20 மாணவர்கள் என 4 பிரிவுகளுக்கு விருப்பப் பாடமாக பிரெஞ்சு மொழி கற்றல் வகுப்புகள் முன்னோடித் திட்டமாக தொடங்கப்படவுள்ளது. மாணவர்கள் ஜூனியர் லெவல் A2 வரை கற்பதே இதன் நோக்கமாகும். இது பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அலையன்ஸ் ஃபிரான்சைஸ் ஆஃப் மெட்ராஸ் (Alliance Française of Madras) இடையிலான கலாச்சாரம் மற்றும் கல்வி வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க படியாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், உதவி துணைத் தூதர் கிறிஸ்டோஃப் பிரமொல்லே (Mr. Christophe Bramoullé-Deputy Consul General), அலையன்ஸ் ஃப்ரான்செய்ஸ் ஆஃப் மெட்ராஸ் இயக்குநர் திருமதி பாட்ரிசியா தெரி ஹார்ட் (Ms.Patricia Thery Hart - Director, Alliance Française of Madras), தென்னிந்தியா, இந்தியாவில் உள்ள பிரெஞ்சு நிறுவனத்தின் ஃப்ரெஞ்சு மொழி ஆலோசகர் தாமஸ் சாமொன்ட் (Mr.Thomas Chaumont - French Language Attaché / South India, French Institute in India) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ்.,(ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், நூருல்லா, ஜோசப்ராஜ், விஜயகுமார், முனைவர் ஜான், அடையாறு ஷபீல் , என்.பி.எம்.ஷேக் அப்துல்லா,கா.ரஃபி அகமது, மு.ஷாகுல் அமீது மேலும் அனைத்து மாவட்ட மற்றும் மாநகர் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்புரை! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக. 29

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் திருவள்ளூர் அடுத்த ஈக்காட்டில் நடைபெற்றது. ஒன்றிய அவைத் தலைவர் எம்.பரக்கத்துல்லாகான் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் புஜ்ஜி டி. ராமகிருஷ்ணன் வரவேற்றார். ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் நிர்வாகிகள் டி.தென்னவன், எஸ். மனோகரன், மதுரை வீரன், விமலாகுமார், பிராங்கிளின், எஸ்.வேலு, எஸ்.சங்கீதா சீனிவாசன், கபிலன், விஜெ.உமா மகேஸ்வரன், நாகராஜன், முரளி கிருஷ்ணன், அரிகிருஷ்ணன், டி.பாலாஜி, டி.எம்.தமிழ்வாணன், கே.பலராமன், ஜெஸ்டின் பால், சந்தோஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி கட்சியின் வேட்பாளர் ஆதரித்து இரவும் பகலும் பாராமல் பணியாற்றிய அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த கழகநிர்வாகிகளுக்கு அனைவருக்கும் நன்றி கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

2026 சட்ட மன்ற மன்ற தேர்தல் வரும் இருப்பதால் அதற்கான பணிகளை மும்முரமாக ஈடுபட வேண்டும்.

பேரறிஞர் அண்ணா வழியில் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த தி.மு.க.வின் பவளவிழா ஆண்டு நிறைவினை, கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படுகிறது இந்நிலையில் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் கழக நிர்வாகிகள் அனைவரும் பெருதிரளா கலந்து கொள்ள வேண்டும்.

இளைஞர்களை அதிக அளவில் உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும். திமுகவின் சாதனைகளை பொது மக்களிடமும், இளைஞர்களிடமும் எடுத்து சொல்லி அதிக அளவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்.

அதிக அளவில் உறுப்பினர்களை சேர்க்கும் ஒன்றிய நிர்வாகிகளுக்கு தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாக பரிசு வழங்கி பாராட்டுவார்.

இளைஞர்களிடம் திமுகவின் சாதனைகளை எடுத்துச் சொல்லி அதிக அளவில் உறுப்பினர்களை சேர்த்து மீண்டும் தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைய அனைவரும் பாடுபட வேண்டும் என தெரிவித்தார்.

இதில் நிர்வாகிகள் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், ம.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதரன், பா. நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், ஆர்.ஜெயசீலன், த.தங்கம் முரளி, உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய கவுன்சிலர் எல்.சரத்குமார் நன்றி கூறினார்.

### முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள

# முதல்வர் மு.க.ஸ்டாலினை வாழ்த்தி மகிழ்கிறோம்!

## டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக 29-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ்.,(ஆர்த்தோ) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மாநில துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், நூருல்லா, ஜோசப்ராஜ், விஜயகுமார், முனைவர் ஜான், அடையாறு ஷபீல் , என்.பி.எம்.ஷேக் அப்துல்லா,கா.ரஃபி அகமது, மு.ஷாகுல் அமீது மேலும் அனைத்து மாவட்ட மற்றும் மாநகர் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் இந்தியாவின் அரசியலை கோபாலபுரத்தில் இருந்து தீர்மானித்த தன்னிகரில்லா தலைவர்; தாய்த்தமிழ்நாட்டின் வளர்ச்சியை தன் பொற்கால ஆட்சியில் கட்டமைத்த நவீன தமிழ்நாட்டின் சிற்பி; உயர்தனிச் செம்மொழி கண்ட நாயகர்; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை அகிலம் வியக்க கொண்டாடி சரித்திரம் படைத்த தமிழ்நாடு முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும் சிறுபான்மையின மக்களின் உரத்த குரலாக; தாழ்ந்து கிடந்த தமிழ்நாட்டை தனிப்பெரும் சாதனைகளில் கட்டமைத்து உயர்த்திட்ட திருக்குவளை நாயகர்; உலகில் வேறெந்த தலைவருக்கும் இல்லாத சாதனை சரித்திரத்தை தன்னகத்தே கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் புகழை என்றும், என்றென்றும் தமிழர்தம் இல்லமெங்கும்; உள்ளமெங்கும் கொண்டாடி மகிழ்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

**தீர்மானங்கள்**

உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்ற தாரக மந்திரத்தை தன்னகத்தே கொண்ட உழைப்பின் நாயகர்; கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் முதலீட்டாளர்களின் முதல் முகவரியாய் தமிழ்நாடு மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

எண்ணற்ற தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின் திசை நோக்கி படையெடுக்க தொடங்கியதற்கு வெளிப்படைத் தன்மை மிகுந்த திராவிட மாடல் அரசே முதற்காரணம்.

அனைத்து துறை வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்டங்கள் வளர்ச்சி, தமிழ்நாட்டில் பரவலான மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதை உறுதி செய்வதை ஒற்றை நோக்கமாக கொண்டு தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது.

மேலும், தொழில் துறையை மட்டுமே நம்பியுள்ள சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரம் இன்று குறிப்பிடத்தகுந்த வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

எனவே, புத்தொழில்கள் மூலம் சிறுபான்மையின மக்களின் பொருளாதார ஏற்றத்திற்கு வழிவகுத்த முதலமைச்சர் அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல், 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும் எனும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து; உயர்தர வேலை வாய்ப்பு மற்றும் உயர்தர முதலீடு ஆகியவற்றை நோக்கமாக கொண்டு முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா செல்லும் திராவிட மாடல் அரசின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் வாழ்த்தி வணங்கி மகிழ்கிறது.

ஈரோட்டுப் பகலவன்; பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை நெஞ்சில் ஏந்தி காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கட்டிக்காத்த திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளாக மக்களுக்கு பணியாற்றி 2024ம் ஆண்டில் தனது பவள விழா நிறைவினை கொண்டாடுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பட்டை தீட்டப்பட்ட இப்பேரியக்கம்; தற்போது பெரியார் அண்ணா கலைஞர் ஆகியோரின் மொத்த உருவாய் முழுவாய் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் வீறு நடைபோட்டு கொண்டிருக்கிறது.

மக்களுக்கான பணியில் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து செயலாற்றி வருவதோடு, சிறுபான்மையின மக்களின் பாதுகாவல் அரணாய் காத்து நிற்கும் ஒரே இயக்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

எண்ணற்ற சாதனைகள், எண்ணிலடங்கா திட்டங்களுக்கு காரணமான தி.மு.கழகத்தின் 75ஆண்டு பவள விழா நிறைவினை கொண்டாடும் வகையில் கழகத்தின் சார்பில் வருகிற செப்டம்பர் தலைநகர் சென்னையில் நடைபெறும் எழுச்சி மிகுந்த விழாவில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

சகோதரத்துவத்தை, சமத்துவத்தை நேரடியாக சிதைக்கும் ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து கொண்டு வரும் சிறுபான்மையினர் விரோத சட்டங்களில் புதிதாக கொண்டுவந்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை இக்கூட்டம் கடுமையாக எதிர்க்கிறது.

கூட்டாட்சித் தத்துவத்தை சிதைக்கும் சிறுபான்மையினருக்கு எதிரான இந்த சட்டத் திருத்தத்தை ஒன்றிய அரசு முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமென வலியுறுத்துவதோடு, சிறுபான்மையினரின் தோளோடு தோள் நின்று அரவணைத்துக் காத்திடும் கழகத் தலைவர் அவர்களின் வழியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் மற்றும் பல்வேறு கழக ஆக்கப்பணிகளுக்காக கழகத் தலைவர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு கழக சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் ஒன்றியம், நகரம், பகுதி, மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் நியமனம் செய்தல்; சிறுபான்மையின பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பை உறுதி செய்திடும் பொருட்டு அதிகளவில் அவர்களுக்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் உள்ளிட்ட தீர்மான ங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.